செ.வெ.எண்: 257/2020 **நாள்: 24.03.2020**

**கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைளை மீறுபவர்கள்மீது சட்டப்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை**

மாவட்ட நிர்வாகம் எடுக்கும் கீழ்க்கண்ட கரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைளை மீறுபவர்கள்மீது சட்டப்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

- பேருந்து நிலையம், தினசரி சந்தை, பொதுகழிவறைகள் ஆகியவை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் தினமும் சுத்தம் செய்யப்படுகின்றன.
- தினமும் இயக்கப்படும் பேருந்துகள் அனைத்தும் போக்குவரத்து பணிமனையில் கிருமி நாசினி மூலமாக தினமும் சுத்தம் செய்யப்பட்ட பின்னர் இயக்கப்படுகின்றன.
- மாவட்டத்திலுள்ள அனைத்து கிளப், பார் மற்றும் டாஸ்மாக் மூடப்பட்டுள்ளன.
- பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்படும் வகையில் வதந்தி பரப்புவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- அண்டை மாநிலங்களில் இருந்து நமது மாவட்டத்திற்கு பரவாமல் தடுக்க போதுமான நடவடிக்கைகள் மாவட்ட எல்லையோர பகுதிகளில் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தங்களது இல்லங்களிலும், அருகாமையிலும், யாருக்கேனும் இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகளோ, பாதிப்போ இருந்தால் அருகில் உள்ள சுகாதார மையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
- முககவசம் மற்றும் கைத்துணி கொண்டு நுகர வேண்டும். தும்மல் ஏற்படும் போது அதற்கென தனியாக உள்ள துணிகளையோ, முககவசங்களையோ பயன்படுத்துதல் அவசியம் ஆகும். அரசு அலுவலகங்களில் குறிப்பாக பொதுமக்கள் அதிகமாக வரும் பகுதிகளில் கிருமிநாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்திட வேண்டும்.
- திருவிழா, திருமணம் போன்ற மக்கள் அதிகம் பங்கு பெறும் நிகழ்வுகளை தவிர்க்க வேண்டும்.
- பொதுமக்கள் மற்ற மாநிலங்களுக்கு பயணிக்கக் கூடாது.
- பொது இடங்களில் ஐந்து பேருக்கு மேல் மக்கள் கூடக்கூடாது.
- பொதுமக்கள் அனைவரும் தனிநபர் சுகாதாரத்தினை பேணவும், குறிப்பாக வீட்டிற்குள் நுழையும் போதும், அவ்வப்போதும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவுவதை உறுதி செய்ய வேண்டும்.

- கைகளை சுத்தம் செய்யாமல் முகத்தை தொட வேண்டாம் எனவும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் விடுமுறை நாட்களின்போது குழுவாக விளையாடாதவாறு கண்காணிக்க வேண்டும்.
- மாவட்ட நிர்வாகம் செயல்படுத்தும் நடைமுறைகளை மக்களும் கடைபிடித்து ஒத்துழைப்பு கொடுப்பதன் மூலம் இந்த கொரோனா நோய் தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.
- வெளிநாடுகளிலிருந்து குமரி மாவட்டத்திற்கு வருகின்ற அனைவரும் சுகாதார துறையினர் மூலம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்கள் கொரோனா வைரஸ் குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.
- மாவட்டத்திலுள்ள திருமண மண்டபங்கள், சமூதாய நலக்கூடங்கள் அனைத்தும் அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டுள்ளது. திருமணங்கள், விழாக்கள் எதுவும் முன்பதிவு செய்யக்கூடாது.
- வழிபாட்டு தலங்களில் அன்றாடம் வழங்கப்படும் அன்னதானம் நிகழ்ச்சிகள் நடத்தக் கூடாது.
- பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்களான அனைத்து இ-சேவை மையங்களும் 31.03.2020 வரை செயல்படாது.
- மக்களின் அன்றாட அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு வசதியாக மற்றும் மக்கள் அதிகம் கூடாத சிறிய காய்கறிக்கடை, பழக்கடைகள், பலசரக்கு கடைகள் மற்றும் மருந்தககங்கள் செயல்பட தடையேதும் இல்லை. பெருவணிக வளாகங்கள், நகைக்கடைகள், துணிக்கடைகள் 31.03.2020 வரை மூடப்பட்டுள்ளது.
- பொதுமக்கள் ரொக்க பண பரிவர்த்தனையினை தவிர்த்திட வேண்டும்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரையோர மீனவ மக்கள் வாழும் பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவுதலை தடுத்திடும் விதமாக 23.03.2020 முதல் 31.03.2020 வரை மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லக்கூடாது. அதனை தொடர்ந்து மாவட்டத்திலுள்ள தேங்காய்பட்டிணம் மீன்பிடி துறைமுகம், சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம், முட்டம் ஜேப்பியார் மீன்பிடி துறைமுகம், குளச்சல் மீன்பிடி துறைமுகம் உட்பட அனைத்து மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் பொதுமக்கள் செல்வதும், ஏலம் எடுப்பதும் முற்றிலும் நிறுத்தப்படுகிறது. எனவே இக்காலங்களில் மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் மீன்பிடி இறங்கு தளங்கள், மற்றும் மீன்பிடி துறைமுகங்களுக்கு வரக்கூடாது.
- மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட கை சுத்திகரிப்பு திரவம் மற்றும் கை கழுவும் திரவம் (Hand Sanitizer and Hand wash) ஆகியவை கன்னியாகுமரி

மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அந்தந்த பகுதி வட்டார வளர்ச்சி அலுவலங்களில் இவற்றினை வாங்கி சுகாதாரத்தினை பேண வேண்டும்.

- அத்தியாவசிய தேவைக்கான பொருட்கள் வாங்கும் காய்கறிகடை, மருந்தகம், பலசரக்கு கடைகளில் பொதுமக்கள் கூட்டமாக சென்று பொருட்கள் வாங்குவதை தவிர்த்திட வேண்டும்.
- இந்த கொரோனா வைரஸ் தீவிரத்தினை உணர்ந்து மக்கள் அவரவர் வீட்டிலிருந்த படியே சமூக இடைவெளி (Social Distancing) கொரோனாவின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு பெறுவோம்.
- பொதுமக்கள் அதிகம் வரக்கூடிய பெரிய திருக்கோவில்கள், தேவாலயங்கள், மற்றும் மசூதிகள்/தர்காக்களில் 31.03.2020 வரை பொது மக்கள் வருவதை தடை செய்யப்பட்டுள்ளது.
- வாரச்சந்தைகள் அனைத்தும் 31.03.2020 வரை மூடப்பட்டுள்ளது.
- மாவட்டத்திலுள்ள அனைத்து ரெஸ்டாரண்டுகளிலும் 31.03.2020 வரை உணவு அறைகளில் உணவு அருந்துவதை தவிர்த்து பார்சல் மூலம் உணவு வழங்கப்பட வேண்டும்.
- முடி திருத்தகங்கள் (Saloon, Beauty Parlour) அனைத்தும் 31.03.2020 வரை மூடப்பட்டுள்ளது.
- தொடர் காய்ச்சல், இருமல், சளி போன்றவை இருப்பின் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனையினை தொடர்பு கொள்ளுமாறும், இது குறித்த சந்தேகங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பேரிடர் மேலாண்மை பிரிவில் 24 மணி நேரமும் செயல்படும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியில் தொடர்பு கொண்டும், மாநில அளவில் 104 - 011 - 23978046, 104, தொலைபேசி: 044 2951 0400, 044 2951 0500, கைப்பேசி: 94443 40496, 87544 48477 என்ற எண் மூலம் தெரிந்து கொள்ளலாம். பேரிடர் மேலாண்மை பிரிவில் சுகாதாரத்துறை பணியாளர் மற்றம் வருவாய்த்துறை பணியாளர்கள் 24 மணி நேரமும் கொரனோ வைரஸ் குறித்த மேற்படி தகவல்கள் தெரிவிக்க பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
- அரசாலும், மாவட்ட நிர்வாகத்தினாலும் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகளை மீறுபவர்கள் குறிப்பாக, கூட்டமாக பொதுமக்கள் கூடுவது (Public Gathering) தொடருமானால் அத்தகைய நபர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.